**செய்தி வெளியீடு எண் : 2630** **நாள் : 29.12.2023**

**செய்தி வெளியீடு**

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956ஆம் நாளை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் ஆட்சிமொழிச் சட்டவாரம் ஒருவார காலத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆட்சிமொழிச் சட்ட வாரம் சென்னை மாவட்டத்தில் 18.12.2023 முதல் 27.12.2023 கொண்டாடப்பட்டது. 18.12.2023 முதல் 22.12.2023 வரை கலைப்பண்பாட்டு இயக்கக கூட்ட அரங்கத்தில் பயிற்சி வகுப்புகள் முற்பகல் 10 மணி முதல் 12.30 வரை நடைபெற்றது.

முதல் நாள் 18.12.2023 அன்று "ஆட்சி மொழிச் சட்ட வரலாறு" தலைப்பில் மேனாள் மாவட்ட அமர்வு நீதிபதி அ. முகமது ஜியாவுதீன் அவர்கள் பயிற்சி அளித்தார்.

இரண்டாம் நாள் 19.12.2023 அன்று "காலந்தோறும் தமிழில் ஆட்சிச் சொற்கள்" என்னும் தலைப்பில் பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு அவர்கள் தலைப்பில் பயிற்சி அளித்தார்.

மூன்றாம் நாள் 20.12.2023 அன்று **"மொழிப் பயிற்சி"** என்னும் தலைப்பில் முனைவர் அண்ணாகண்ணன் அவர்கள் பயிற்சி அளித்தார்.

நான்காம் நாள் 21.12.2023 அன்று **"மொழிபெயர்ப்பு"** என்னும் தலைப்பில் திருமதி த. இளவேனில் முல்லை அவர்கள் பயிற்சி அளித்தார்.

ஐந்தாம் நாள் 22.12.2023 அன்று **"கணினித் தமிழ்"** என்னும் தலைப்பில் முனைவர் க. சண்முகம் அவர்கள் பயிற்சி அளித்தார்.

ஆறாம் நாள் 2612.2023 அன்று ஆட்சிமொழிச் சட்ட வாரத்தில் ஒரு நிகழ்வான வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை வைக்க வலியுறுத்தல், கடைகள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள், உணவகங்கள் முதலியவற்றில் பெயர்ப்பலகைகளைச் சரியாகத் தமிழ்ச் சொற்களில் எழுதி வைக்கும் பொருட்டு **"வணிகர் சங்கங்களின் கூட்டம்"** 26.12.2023 அன்று மாலை 4.35 மணி முதல் 6.00 மணிவரை நடைபெற்றது.

ஏழாம் நாள் 27.12.2023 அன்று ஆட்சிமொழிச் சட்ட வார விழிப்புணர்வுப் பேரணியை சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் தொடங்கி வைத்தார். இப்பேரணியில் கல்லூரி முதல்வர், பேராசிரியர் பெருமக்கள் மற்றும் மாநிலக் கல்லூரியில் பயிலும் 300 மாணவர்கள் கலந்துக் கொண்டு ஆட்சிமொழிச் சட்டவார விளம்பரப் பதாகைகள் ஏந்தி **"எங்கும் தமிழ் எதிலும் தமிழ்"** என்ற வாசகங்களை முழக்கமிட்டு விழிப்புணர்வுப் பேரணியில் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in